முட்களுடன் முட்களில்லாமல்
CITIZEN சிற்றிசன்
கைக்கடிகாரங்கள்
சுவர், மேசை
மணிக்கூடுகள்
தாராளமாகக் கிடைக்கும்
நேரடி இறக்குமதியாளர்
ஸி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284.

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 31 ஜுல்ஹஜ்: 14 இதழ்: 248
யாழ்பாணம் செவ்வாய் கிழமை 17-10-78

LANKA JAFFNA
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

உழைக்கும் வர்க்கத்தின்
உற்ற நண்பன்
ஈஸ்டன் ஸைக்கிள்
EASTERN CYCLE
ஆடவர், மகளிர் மாடல்கள்
தாராளமாகக் கிடைக்கும்
ஸி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

கடந்த ஆட்சிக்கால விசாரணை

# பாராளுமன்றத்துக்கே பூரண அதிகாரம் உண்டு!

## பாப்பரசர் தெரிவானார்

(வத்திக்கான்)

புதிய பாப்பரசர் நேற்று (இலங்கை நேரப்படி இரவு 11 மணியளவில்) தெரிவு செய்யப்பட்டார்.

புதிய பரிசுத்த தந்

[5-ம் பக்கம் பார்க்க]

## சிறிமாவின் அப்பீல்மனுமீது சட்டத்தரணி வாதம்

(கொழும்பு)

''கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் பற்றி விசாரணைசெய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை. ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழுச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றை விசாரணைசெய்யும் உரிமை பற்றி, ஆணைக்குழுச் சட்டத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. முன்னாள் பிரதமர் பற்றியும், அவரது ஆட்சி பற்றியும் விசாரணைசெய்வதற்குப் பாராளுமன்றத்துக்கே முழு உரிமையும் உண்டு,''

இவ்வாறு, முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சட்டத்தரணி திரு. எச். சி. டி. சில்வா, நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழுவிற்கு எதிராகத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு, நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான திருவாளர்கள் டபிள்யூ. விமலரத்ன, ஏ. வைத்திலிங்கம், கொலின் தோமே ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி,

(6-ம் பக்கம் பார்க்க)

## மீன் வடிவில் பிறந்த குழந்தை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒரு பெண், மீன்வடிவில் அமைந்த சிசுவொன்றைப்பிரசவித்துள்ளார்.

சுமார் மூன்று றாத்தல் நிறைகொண்ட இச்சிசு பிறந்த சில நிமிடங்களில் மரணமானது.

கிளிநொச்சி, இராமநாதபுரத்தைச் சேர்ந்த இப்பெண் பிரசவித்த அதிசயக் குழந்தையின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி மீன்வடிவில் அமைந்துள்ளது. இரண்டு கால்களும் ஒன்ருக இணையப்பெற்று, ஒரே காலாகக் காணப்பட்டது. காலின் பாதங்கள் மீனின் வால்மாதிரி வடிவம் கொண்டு, நான்கு விரல்கள் மட்டும் காணப்பட்டன.

இடுப்புக்கு மேலுள்ள பகுதி மனிதசாயலைக் கொண்டிருந்தது.

இந்த அதிசய மீன்வடிவுக் குழந்தையை ஏராளமானவர்கள் பார்த்துச் சென்றனர்.

## ஜனாதிபதி 26-ந் திகதி இந்தியா செல்கிறார்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இந்திய அரசாங்கத்தின் அழைப்பையேற்று, இம்மாதம் 26ம் திகதி பாரதம் செல்கின்றார். ஜனாதிபதியுடன் அவரது பாரியாரும் செல்கின்றார்.

ராஜாங்க விஜயத்தை மேற்கொண்டு அடுத்தமாதம் ஒன்பதாம்திகதிவரை பாரதத்தில் தங்கியிருக்கும் ஜனாதிபதி பௌத்த வழிபாட்டு ஸ்தலங்களுக்கும், வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் விஜயம் செய்வார். [ம]

## தமிழர் - சிங்களவர் ஒன்ருக வாழ்ந்த சரித்திரம் இல்லை!

### சன்சோனி கமிஷன் முன்பாக திருமலை எம். பி.

[திருக்கோணமலை]

தமிழரும் சிங்களவரும் ஒன்ருக-ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை என்று திருக்கோணமலை எம். பி. திரு. இரா சம்பந்தன், சன்சோனி கமிஷன் முன்பாக நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார்

திரு. இரா. சம்பந்தன் நேற்று ஆருவது நாளாகத் தொடர்ந்து சாட்சியமளித்தார். தமது சாட்சியத்தில் அவர் மேலும் தெரித்ததாவது:

'திருக்கோணமலையில் சிங்களவர் குடியேற்றம் ஒரு இயற்கையானது என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்களவர் குடியேற்றத் திட்டம், தேசிய ஒற்றுமைக்கு வழிவகுக்காது.

''நாம் புலி போன்ற இயக்கங்களை ஆதரிக்கவில்லை. சாத்வீகம்தான் நமது பாதை'' என்று திருகோணமலை எம். பி. கூறினார். (ம)

(2ம் பக்கமும் பார்க்க)

## தமிழர் இங்கு ஆளப்படும் இனமாக மதிக்கப்பட்டனர்

— ராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

'இந்த நாட்டின் 20 லட்சம் தமிழ் மக்களும் இதுகாலவரை ஆளப்படும் இனமாக மதிக்கப்பட்டு வந்தனர். இதன் காரணமாகவே எமது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் எல்லாம் தோல்வியிலேயே முடிவடைந்தன. ஆனல் இனிமேல இந்த நாட்டில் சமாதானத்துக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்க மாட்டோம்.'

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று கோட்டேயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

கோட்டே மக்கள் தமக்கு அளித்த வரவேற்பின் போது திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சமாதானம் நிலவாத நாடுகளுக்கு கடன் உதவி வழங்குவதில்லை என்று உலக வங்கி தீர்மானித்துள்ளது. சமாதானம் நிலவாத நாடுகளில் அமைதியை ஏற்படுத்தவே உலகவங்கியின் கடன் பயன்படுத்தப் போதுமானது என்பதனலேயே உலக வங்கி மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

அரசியல் அடிமைகள்

இந்த நாட்டில் 'அரசியல் அடிமைகள்' இருக்கிருர்கள் என்று பல வெளிநாடுகள் கருதி வந்தன. கடந்த காலங்களில் ஆட்சி புரிந்த திறமையற்ற நிர்வாகிகளின் நிர்வாகமே இதற்குக் காரணம்.

ஆனல் இன்றைய ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவின் தலைமையில் அந்த நிலைமை ஏற்படவே மாட்டாது.

திரு ஜெயவர்த்தனவின் தலைமையில் நிச்சயம் தார்மீக சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும். (இ)

## இலங்கை நிர்வாக சேவை:

## தெரிவுபெற்ற தமிழர் விபரம்

[கொழும்பு]

இலங்கை நிர்வாகசேவை பரீட்சையில் சித்தி பெற்ற 141 பேரில் ஒன்பதுபேர் மட்டுமே தமிழர்களாவர். (பதினெருபேர் தமிழரென்று முன்னர் வெளிவந்த செய்தி தவருகும்)

சகுசி அடிப்படையிலான தெரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆறு தமிழர்களின் பெயர் விபரங்கள்:

திருவாளர்கள்: எஸ். பாலசிங்கம் மகாவலி அபிவிருத்தி அமைச்சு, வி. சிவன், (தோட்டத்தொழில் அமைச்சு) சி. எம். கணேசலிங்கம், (கச்சேரி, திருகோணமலை) எஸ். சனகசிங்கம், (கல்வியமைச்சு) எஸ் கணேசு, (கச்சேரி, யாழ்ப்பாண) சி கே சண்முகராசா (பாதுகாப்பு அமைச்சு)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைத்தேர்வில் திருவாளர் கள்: எஸ் தில்லை நடராசா, (பொலிகண்டி, யாழ்ப்பாணம்) சி. சணேஷ், எஸ். தொழிலாளர்... பிரதான நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம்... ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ]ம[

### சன்சோனிக்கமிஷன் விசாரணை:

# "தமிழர்களை துரத்தி துரத்தி கடற்படையினர்சுட்டனர்

## என் மகள் மல்லிகாவும் 17 வயது இளைஞனும் பலி"

### மருதமுத்து சாட்சியம்

(நமது மூதூர் நிருபர்)

[திருகோணமலை]

"தமிழர்களைக் கொல்லுவோம் என்று கோஷமிட்டபடி ஆகஸ்ட் 22ம்திகதி கடற்படையினர் எங்களைச் சுட்டனர்'

பன்குளம் பகுதியைச் சேர்ந்த பி. மருதமுத்து(35வயது) திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெறும் சன் சோனிகமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

மருதமுத்து தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 'கடற்படையினரின் சூட்டுக்கு எனதுமகள் மல்லிகாவும், வை. குணம் என்ற 17 வயது இளைஞனும் பலியாகினர். தமிழர்களை துரத்தித் துரத்தி கடற்படையினர் சுட்டன்ர்.

நான் பன்குளப்பகுதியில் 10 வருடமாக வாழ்ந்துவருகிறேன். பன்குளம் ஒரு தமிழ்க் கிராமம். இங்குள்ள அநேகர் விவசாயிகள். பன்குளம் பகுதியைச்சேர்ந்த கறுப்பாயி, பத்மநாதன் என்ற இன்னும் இருவரும் காடயர்களினல் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் கலவரத்தின்போது ஆகஸ்ட் 22ம் திகதி காடையர்களைவிடகடற்படையினரே அதிக அட்டூழியம் புரிந்தனர்.

### மன்மதன் சாட்சியம்

இவரைத்தொடர்ந்து சாட்சியமளித்த பாலையூற்றைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி மன்மதன்(28வயது) தமது சாட்சியத்தில் கூறியதாவது; 'கலவர காலத்தில் நாங்கள் சம்பா லேன் என்னும் இடத்தில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டத்தில் குடியிருந்தோம். அப்பகுதியில் சிங்களவர், தமிழர், பறங்கியர் போன்ற பல சமூகத்தினர் வாழ்ந்து வந்தனர்.

ஆகஸ்ட் 22ந் திகதி சிங்களவர்கள் வந்து காடைத்தனமாக எங்களை கொல்வோம் என்று கூறிப் பயமுறுத்தினர். இதனல் நாங்கள் இரவோடிரவாகக் காட்டிற்குள்போய் ஒளித்துக்கொண்டோம். நாங்கள் ஒளிந்திருந்தகாடு நாங்கள் குடியிருந்த பகுதிக்கு அண்மையில்தான் உள்ளது. ஆகஸ்ட் 22ந் திகதி இரவு ஒரு கோஷ்டியினர்வந்து எங்கள் விட்டைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதனல் எங்கள்வீட்டு வளவுக்குள் கட்டப்பட்டிருந்த கோழிப்பண்ணையும் எரிந்து சாம்பலாகியது. கோழிப்பண்ணையில் 65 கோழிகள் இருந்தன. வீட்டினுள் இருந்த பொருட்களும் எரிந்து சாம்பலாகியது. இந்தப் பயங்கரச் சம்பவத்தில் 33ஆயிரம் ரூபா எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

### முறைப்பாடு செய்தேன்

வீட்டுக்குத் தீயிட்டவர்களை பெயர்குறிப்பிட்டு நான்பொலிசில் முறைப்பாடு செய்தேன். ஆனல் அவர்களுக்கெதிராக இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

### மேரிகிறேஸ் சாட்சியம்

சம்பா குடியேற்றத்திட்டத்தைச்சேர்ந்த திருமதி மேரி கிறேஸ் தனது சாட்சியத்தில் கூறியதாவது: 'நாங்கள்சம்பா குடியேற்றத்திட்டத்தில் வாழ்பவர்கள், எங்கள் வீடு கல்வீடு. கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் போது அப்பகுதியிலுள்ள தமிழ் வீடுகளைச் சிங்களவர்கள கொளுத்தப்போவதாக பயமுறுத்தினர். இதனல் அயல் அண்டையிலுள்ள தமிழர்கள் எங்கள்வீட்டில்தஞ்சம் புகுந்தன. ஆனல் எங்கள் வீடும் அன்று இரவு மிதந்து புரச் சிங்களவர்களாலும் எமதுகுடியேற்றத்தை சேர்ந்த சிங்களவர்களாலும் சேதனையிடப்பட்டது, அப்போது எமது வீட்டில் தம்பையா என்ற ஒரேஒரு ஆண் மட்டும் இருந்தார்.

உடனே அவர்கள் தம்பையாவை வீட்டிற்குள் இருந்து இழுத்துச்சென்றனர். சில நிமிடங்களில் தம்பையாவின் 'ஐயோ' என்ற கூக்குரல் சத்தம் கேட்டது. இச்சத்தம் கேட்ட அவரதுமகள் எமது வீட்டிற்குள் இருந்து கூக்குரலிட்டார். எனது வீட்டிற்குள் நின்ற ஏனைய சிங்களவர்கள் சப்தம் போட்டால் எம்மைக் கொன்றுவிடுவதாகப்பயமுறுத்தினர்.

சிறிதுநேரத்தில் தம்பையாவை மூச்சுத்திணறிய நிலையில் சிங்களவர்கள் வீட்டிற்குள் கொண்டுவந்தனர். அவருக்கு நாங்கள் தைலம்போட்டோம்.

இதன்பின் காடையர்கள் எங்கள் எல்லோரையும் ஓர் அறையில்போட்டுபூட்டிவிட்டு எவரும் வெளியில் வரக்கூடாது என்று உத்தரவிட்டுச் சென்றனர்.

இவர்கள்சென்ற சிறிது நேரத்தில் எனது வீட்டுப் பக்கத்தில் குடியிருக்கும் சிறிசேன என்பவர் அங்குவந்தார்.

அவர் என்னைப் பார்த்து- நாங்கள் இதுவரை உமது கிணற்றில் தண்ணீர் அள்ளிப் பாவித்து வந்ததால் உம்மை ஒன்றும் செய்யமாட்டோம். ஆனல் அயல்வீடுகள் கொளுத்தப்படும், நீர் இங்கிருந்தால் உமக்கும் ஆபத்து வரும் அதனல் உடனடியாக அனைவருமாக இவ்விடத்தைவிட்டு ஓடிவிடவேண்டும் என்று கூறினர்.

### இங்கிருந்தால் ஆபத்து

இதன் பின்பும் இங்கிருந்தால் ஆபத்து என்பதை அறிந்திருந்த நாங்கள் அங்கிருந்து வெளியேறி "கணேச லேன்" என்னும் இடத்தில் உள்ள ஒரு தமிழ் வீட்டில் தஞ்சம் புகுந்தோம்: அங்கும் பயமுறுத்தப்பட்டதனல் முஸ்லீம் வீடொன்றில் அபயம் கொண்டோம். அங்கு அனைத்தையும்விட அகோரமாகப் பயமுறுத்தப்பட்டோம். இதன் பின்பே ஓட்டமாக ஒளித்து ஒளித்து ஓடியநாங்கள் அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்தோம்.

கலவரம் ஒருவாறு ஓய்ந்ததன் பின் நாங்கள் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தான் எங்கள் சம்பா குடியேற்றத்திட்டத்தை அடைந்தோம்.

அங்கு நாங்கள் போகும் போது எமது வீட்டில் வேறு ஒரு குடும்பம் குடியிருந்தது.

இதையிட்டு நாங்கள் பொலிசில் முறைப்பாடு செய்ததற்கிணங்கப் பொலிசார் அவர்களை வெளியேற்றி எம்மைக் குடி அமர்த்தினர். இதுதான் நடந்தது.

### பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை

கலவரத்தின்போது எமது அயல்வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியவர்களை நான் அடையாளம் காட்டி எட்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு பொலிசில் புகார்செய்தேன். ஆனல் அவர்களுக்கெதிராக எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

### நடவடிக்கை எடுக்கக் கட்டளை

சாட்சியின் இக்கூற்றை கவனித்த கமிஷனர், சாட்சி குறிப்பிட்ட எட்டு சந்தேக நபர்களுக்கெதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார்,

இதற்காக வேண்டிய பணிப்புரையை கமிஷர் அரச சட்டத்தரணிக்குப் பிறப்பித்தார். (க)

---

# "திருமலை 'தமிழ்ஈழத்தின்' கேந்திர ஸ்தானமாகும்"

### திருமலை எம். பி. சாட்சியம்

(திருகோணமலை)

திருகோணமலை நகருக்கு யானைகள் வந்தன, கரடிகள் வந்தன. ஆனல் இங்கு புலிகள் வந்தது கிடையாது. புலிகள் வந்தது என்ற கதையை என்னல் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்கமுடியாது."

திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெறும் சன்சோனிக்கமிஷன் முன் திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

திரு. இரா. சம்பந்தர், சிங்கள மகாஜன பெரமுன சட்டத்தரணி திரு. ஹரிச்சந்திர விஜேதுங்காவால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணையின்போது அவர் தொடர்ந்து கூறியதாவது:

திருகோணமலை மாவட்டத்தில் சில இடங்களில் மட்டும் தான் பௌத்தவிகாரைகள் இருக்கின்றன. அப்பகுதியில் சிங்களவரும் வாழ்கின்றனர்.

ஆனல் திருமலை மாவட்டம் பூராகத் தமிழர்கள் பரவலாக வாழ்கின்றனர். சில பகுதிகள் இன்னும் வளர்ச்சி அடையாத காடுகள் இருக்கின்றன.

திருமலை நகரம் தொன்றுதொட்டுத் தமிழர்களுடைய நகரமே. இது தமிழ் ஈழத்தின் கேந்திரஸ்தானமாகும்.

திருகோணமலை கோணேஸ்வரஆலயக்கோட்டை 1624-ம் ஆண்டு போர்த்துக்கீசரால் கட்டப்பட்டது. இதற்கான வரலாற்றுச் சான்றுகள் இன்றும் தனக்கெனத் தனிப் புதுப் பொலிவுடன் உள்ளது.

கி.மு. 1300-ம் ஆண்டில் திருகோமலையில் கோணேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆனல் போர்த்துக்கீசரின் வெறித்தனத்தால் இவ்வாலயம் அவர்கள் காலத்தில் அழிக்கப்பட்டது. மீண்டும் 1951-ம், 52-ம் ஆண்டுகளில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கான வரலாறும் எம்வசம் உண்டு.

### வீரநகரில் 7 சிலைகள்

திருமலை வீரநகர் என்ற இடத்தில் 7 சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை சிவபெருமான் — பார்வதி உள்ளடக்கி இந்துக்கடவுள்களின் சிலைகளாகும். இப்படி வரலாற்றுப்புகழுடன் திகழும் கோணேஸ்வர ஆலய கோட்டை வளவிற்குள் அரசமரம் ஒன்றிருந்து, அது வெட்டப்பட்டதாகக் கூறப்படும் கதை பொய்யானது. இதுவரை நான் கேள்விப்படாத இக்கதையை நம்ப நான் தயாராக இல்லை.

அங்கு அரசமரம் இருந்ததாகவும் ஒரு காரியாதிகாரி அதை வெட்ட உத்தரவிட்டதாகவும் கூறப்படும் கதை பொய்யானது.

அங்கு அரசமரம் இருக்கவில்லை. 1956-ம் ஆண்டு கோணேஸ்வர ஆலயம் புனரமைக்கப்பட்டபோது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவிடம் காணி கோரப்பட்டது.

### காணி வழங்க மறுத்தார்

ஆனல் அவர் அதை வழங்க மறுத்தார். 1960-ம் ஆண்டு திருகோணமலை நகரத்தில் 18 அரசமரங்கள் நாட்டப்பட்டன எனக் கூறப்பட்டுள்ளது. 1964-ம் ஆண்டு வீசிய பயங்கரச் சூருவளிக் காற்றினல் இப்பகுதியில் பல சரித்திரப் புகழ்மிக்க மரங்கள் வீழ்ந்துவிட்டன. இதில் சில அரசமரங்களும் வீழ்ந்திருக்கலாம்.

இதைவிட்டு இப்பகுதித் தமிழர்கள் அரசமரங்களை வேண்டுமென்று வெட்டினர்கள் என்று கூறப்படுவது தவறு. இதை நான் ஏற்கமாட்டேன்.

திருகோணமலையில் வசுழும் தமிழர்கள் சமயப் பற்றுடையவர்கள் பலாத்காரமாகத் தமிழர்கள் அரசமரங்களை வெட்டினர்கள். இதனல் தான் இங்கு கலவரம் மூண்

(6ம் பக்கம் பார்க்க)

---

## இ.த.ஆ.சங்க உடுவில் கிளை

[யாழ்ப்பாணம்]

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க உடுவில் கிளையின் வருடாந்தப்பொதுக்கூட்டம் அடுத்தமாதம் 5-ம் திகதி நடைபெறவுள்ளது

வேட்பாளர்மனு இம்மாதம் 26ந் திகதியுடன் முடிவடைகிறது என்று அதன் செயலாளர் திரு. எஸ். சோதிப் பெருமாள் தெரிவித்தார் [உ[

---

## மகாஜன வெற்றி

]அரியாலை]

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ் பரி.யோவர்ன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற இரண்டாம் பிரிவுக்கான ஹொக்கிப் போட்டியில் 1 - 0 கோலால் மகாஜனக்கல்லூரி வெற்றி பெற்றது

மகாஜனக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. [இ]

---


### வேலணை ப. நோ. கூ., சங்கம்

## பதவி வெற்றிடம்

### தற்காலிகம்

களஞ்சியப் பொறுப்பாளர் தரம் 11க்கு 26-10-78க்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமைகள், வேதனம் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு அறிவித்தலுக்கும், சங்கத்தின் அங்கீகரிக்கப்பெற்ற நடைமுறை விதிகளுக்கும் அமைவானது. மேற்படி பதவி ஆளணித்திரட்டு அங்கீகாரம் பெற்று உறுதி செய்யப்படும் வரை தற்காலிகமானது: மேலும் விபரங்கட்கு 12-5-72-ந் திகதிய 15009/12ஏ இலக்க அதிவிசேஷ வர்த்தமானியைப் பார்க்க. மேலும் விபரங்கள் தேவைப்படின் காரியாலயத்தில் . தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்.**

வேலணை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
வேலணை. 0590

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: ஈடு 14568

1. சதாசிவம் கந்தையா இல. 13, செட்டித்தெரு.
   நல்லூர், யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. முத்துக்குமாரு இராமலிங்கம்
2. முத்துக்குமாரு இராமலிங்கம் மகள் தேவகனி,
   இருவரும் இல: 49 கொட்டடி.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 14568-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1978-ம் வருஷம் மார்கழி 27 ந் திகதி (27-12-78) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 31650/- க் 7-10-74 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ரூபாய் 30,000/-க்கு 18 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 775/94.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப் பகுதி முகமாலைக் கோயிற்பற்று கிளாலி இறை "காரக்காடு தோட்டம்" ஏக்கர் நாற்பது (ஏ.40) தென்னைமரங்களும் எல்லை கிழக்கு தெற்குதி இராமலிங்கம்பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு றேமன் கதலிக் சேச்சுக்குரிய அவரிக்காடு (அவரிக்காடு) என்னும் தென்னம் தோட்டம், மேற்கு கிராமச்சபை றேட் பதிவு B 61/132 இவ்வாதனம் அளவைக்காரர் T கந்தையாவால் 3-2-71ல் அளந்து விபரிக்கப்பட்ட 4946 ம் இலக்கபடத்தில் காட்டப்பட்டது.

**இ. கனகரத்தினம்,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

10, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 0591

ஈழநாடு
The Eelanaadu

# "செயற்கை உரம்பாவியாதீர் அதனுல்புதுநோய்கள்வரும்

## விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளதாக பரு. எம். பி. அறிவுறுத்து

(கரணவாய்)

"இலங்கையின் சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் இவ்வேளையில் நாம் மிகவும் சிந்தித்துச் செயல்பட வேண்டியவர்களாயுள்ளோம். இன்று எமது விடுதலைப் போராட்டமானது அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய மூன்று பிரிவுகளில் நடந்துகொண்டிருக்கிறது. பெரிய அளவிலான விடுதலைப் போராட்டத்தை எதிர்நோக்கியிருக்கும் நாம் இந்த இடைக்காலத்தை எமது பொருளாதாரத்தை விருத்தியுறச் செய்வதில் பயன்படுத்த வேண்டும்".

இவ்வாறு வல்வெட்டித்துறை கொற்றையூர் கிராமமுன்னேற்றச் சங்க ஆண்டு விழாவில் உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் குறிப்பிட்டார். திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"இன்றைய சிங்கள அரசாங்கம் வெள்ளையன் காட்டிச் சென்ற பிரித்தாளும் கொள்கையைப் பயன்படுத்தித் தமிழினத்தைக் கூறுபோட முயல்கிறது. சீறும் பாம்பை விடச் சிரிக்கும் மனிதனால் ஆபத்து அதிகம் என்பர். தமிழ் மக்களை அடக்குவதற்காக சாம, பேத, தான, தண்ட முறைகளை இன்றைய அரசாங்கம் கையாள்கிறது. இவற்றிற்கெல்லாம் தப்பி அரசின் வலைக்குள் வீழ்ந்துவிடாமல் மிகுந்த இன்னல்களுக்கிடையில் காரியங்களைச் சாதிக்க வேண்டியவர்களாயுள்ளோம். எனவே சிங்கள அரசை நம்பியிராமல் எமது பொருளாதாரத்தை நாமே விருத்திசெய்ய வேண்டும். எமது பிரதேசத்திலுள்ள பனை வளத்தின் முழுப்பயனையும் நாம் அடைய வேண்டும். பனம்பொருள் அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டுள்ளதால் பனைவளம் மிக்க வடமராட்சிப்பகுதி மக்கள் அதிக பயனைப்பெற முடியும். பனையை மூலமாகக் கொண்டுவிஞ்ஞான ரீதியில் எத்தனையோவிதமான பொருட்களை ஏற்றுமதித் தரத்தில் தயாரித்து அதிக பணம் ஈட்டமுடியும். முன்னைய அரசாங்க காலத்தில் பனைகளை அழித்துவிட்டு வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களைச் செய்கை பண்ணிய நிலங்கள் இன்று கட்டாந்தரைகளாக வெறுமனே பயனற்றுக் கிடக்கின்றன.

### செயற்கை உரம் மண்ணுக்கு நஞ்சு

"வடபகுதி விவசாயிகள் அதிகளவு செயற்கை உரம் பாவிப்பதால் நிலம் நச்சுத் தன்மையடைந்து வருகிறது. இதனுல் இன்னும் சில ஆண்டுகளில் குடிநீர் நச்சுத்தன்மையுறுவதுடன் பல புதுவிதமான நோய்களும் பரவலாமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.' ஆகவே விவசாயிகள் செயற்கைஉரப் பாவனையைக் கைவிட்டு இலை, குழை, எரு முதலிய இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தவேண்டும். இளைஞர்கள் ஆக்கபூர்வமான

(5-ம் பக்கம் பார்க்க)

# "ஆசிரியர் இடமாற்றத்தில் மர்மம்; பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்"

## வட்டு. எம். பி. கோரிக்கை

(சங்கானை)

"ஆசிரியர் இடமாற்றங்கள் எம். பி. க்களுக்கோ ஆசிரியர் சங்கங்களுக்கோ, கல்லூரி அதிபர்களுக்கோ தெரியாதவகையில் நடைபெறுகின்றது. இதனை நாம் பகிரங்கமாக எதிர்க்கவேண்டும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை எம் பி, திரு. ரி திருநாவுக்கரசு இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டை கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. கே. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. திருநாவுக்கரசு எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள், அவ்வப்பாடசாலை பெற்றேர் ஆசிரியர் சங்கத்திலேயெ தங்கியுள்ளது. அதேபோல் ஆசிரியர்களின் இடமாற்றங்களும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் சிபார்சிற்கமையவே எனது தொகுதியில் இடமாற்றம் பெறச்செய்துவருகிறேனே அல்லாமல் தேர்தலில் எனக்காக வாக்களிக்காது எதிர்பிரசாரத்தில் ஈடுபட்ட எந்த ஆசிரியருக்கும் வஞ்சம் தீர்க்கும் வகையில் இடமாற்றம் பெற்றுக் கொடுக்க நான் முனைந்ததும் இல்லை, முனையப்போவதும் இல்லை."

### அரசின் திட்டம்

"இன்றைய நிலையில் ஆசிரியர் சங்கம் மற்றும் சங்கங்கள் எப்படி இயங்கவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டும். கடந்த 28ம் திகதி நடைபெறவிருந்த பொதுவேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காகவே தொகுதிரீதியாக 250 பேர்கள் திடீரெனத் தெரிவுசெய்யப்பட்டனர். தொழிற் சங்கத்தை உடைப்பதற்கு தொழிற்சங்கத்தை ஆக்குபவர்கள்மூலம் நடைமுறைப்படுத்

[5-ம் பக்கம் பாரக்க]

## விமோசனம் பிறக்குமா?

இலங்கையில் வெளியாகும் நூல்கள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் போன்றவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்வது தொடர்பாக எழுத்தாளர்கள் படத்தயாரிப்பாளர்கள் போன்ருேரின் ஆலோசனையைப்பெறும்பொருட்டு அவர்களுடன் வர்த்தக அமைச்சர் பேச்சுவார்த்தைகள் நடத்த விரும்புவதாக செய்தியொன்று வெளிவந்துள்ளது

இந்தியாவிலிருந்து இங்கு கட்டுப்பாடின்றி சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் வந்து குவிவதனல் உள்ளூரில் வெளியாகும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பாதிப்புக்குள்ளாவது பற்றி வெகுகாலமாகவே இங்குள்ள எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் கவலை தெரிவித்து வருகிருர்கள்.

முன்னைய அரசு தமிழ் நாட்டிலிருந்து வரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் விஷயத்தில் ஒருவித கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. அதனுல் உள்ளூரில் பல புதிய சஞ்சிகைகள தோன்றின. அவைகளுக்கு வாசகர்கள் மத்தியில் ஓரளவு ஆதரவு வளரத் தொடங்கியது.

ஆனுல் திடீரென மீண்டும் கட்டுப்பாடு இல்லாமல் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் வர ஆரம்பித்ததினுல் வாசகர்கள் மத்தியில் வளர்ந்துவந்த ஆர்வம் மங்கத்தொடங்கிவிட்டது.

எந்தவிதத்திலும் பயனளிக்கமுடியாதவையும், இளம் சமூகத்தினரைக் கெடுக்கக் கூடியவையுமான ஆபாச சஞ்சிகைகள் எல்லாம் வரத்தொடங்கிவிட்டன.

இப்படியான சஞ்சிகைகள் உள்ளூரில் மாத்திரம் வெளியாகவில்லையா என்பது வேறுவிடயம்.

இங்கே வெளியாகும் தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களை நம் மக்கள் விரும்பிப் படிக்கவும், இங்கே தயாரிக்கப்படும் படங்களுக்குப்போதிய வரவேற்பு அளிக்கவுமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கானவழிமுறைகளை அமைச்சருடன் நடத்தும் சந்திப்பின்போது எழுத்தாளர்களும், படத்தயாரிப்பாளர்களும் எடுத்துக்கூறுவார்கள் என்று எதிர்பார்க்கின்ருேம்.

இந்தியாவுக்கு ஏற்றுமதியாவதின் மூலம் மாத்திரம் தான் இவை வளரமுடியும் என்பதில்லை.

வர்த்தக அமைச்சர் இந்த விஷயத்தில் அக்கறை எடுத்திருப்பதற்காக அவரைப் பாராட்டவேண்டும்.

இந்தியாவுடனை வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் காலங்களில் இங்கே உற்பத்தியாகும் சஞ்சிகைகள், நூல்கள், படங்கள் போன்றவற்றையும் ஒரு குறிப்பிட்ட அளவில் இந்தியர் இறக்குமதி செய்யும் வகையில் அமைச்சர் வழியேற்படுத்துவார் என்று நம்பலாம்.

அதற்கான யோசனைகளை எழுத்தாளர்களும், படத்தயாரிப்பாளர்களும்அமைச்சருக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிருர்கள்.

## நீலிப்பந்தனையின் துயர்

தம் மரணத்தைப்பற்றிக் கனவிலும் நினைத்துப்பார்க்காது மரணத்தை இனிதாக்கிக்கொண்டவர்தான் 'பேபி' என்று அழைக்கப்படும் செல்வி கருணதேவியாவார்.

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சுங்க உத்தியோகத்தர் திரு நவரத்தினத்திற்கும் திருமதி நவரத்தினத்திற்கும் பிறந்த இரட்டைப் பிள்ளைகளுள் ஒருவரான இவரது வாழ்வு புனிதமானது. இன்சொல்லும் பரோபகாரமும் கொண்ட இவரின் பேரிழப்பால் நீலிப்பந்தனை வாழ் மக்கள் சொல்லொணுத் துயரில் ஆழ்ந்துள்ளனர்.

24 வருடங்களே இப்பூவுலகில் வாழ்ந்த இவர், யார் என்ன உதவி கேட்டாலும் புன்முறுவலுடன்தான் செய்வார். இவர் மறந்தும்கூட செல்வத்தில் ஆசை கொண்டாரில்லை. எந்தக் காரியத்திற்கும் பிறரை அணுகி அறியாதவர். தன் வாழ்நாளில் ஆடம்பரமாக வாழவேண்டும் என்று சிறிதும் எண்ணவில்லை. செல்வந்தக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் நாகரிகம் முன்னேறிவரும் இவ்வுலகில் தம் ஆடைகளில் கூட எளிமையான, அடக்கமான ஆடைகளை அணிந்து அதில் தனி அழகைப் பெற்ருர்.

இவர் இறந்த 31வது நாளாகிய இன்று அவர் எம்முடன் வாழ்ந்ததை எண்ணி அவர் கையாண்ட சில நல்லொழுக்கங்களைக் கையாள்வோமாக. அவரது ஆத்மா சாந்தியடைக.

—ஒரு நண்பி.

## மணிவாக்கு

உனது குற்றங்குறைகளை உணர். பிறரில் நல்லதையே பார். அவர்கள் நற்குணங்களையும் புகழ்.

—ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி



# இந்திரா காந்தி மீண்டும் பாராளுமன்றம் செல்வதை விரும்புகிறேனா?

## பத்திரிகைச் செய்திக்கு தேசாய் மறுப்பு

அகமதாபாத், அக். 16

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதைத் தாம் விரும்புவதாகவெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவை என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

'சிக்மகளூர் இடைத் தேர்தலில் போட்டியிடும் திருமதி காந்தி மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நுழைவதைத் தாம் விரும்புவதாக திரு. தேசாய் தெரிவித்துள்ளார்' என சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'திருமதிகாந்திக்கும் இடைத் தேர்தலில் போட்டியிடஉரிமையுண்டு' என்று மட்டுமே தாம் கூறியதாகவும் தேசாய் அகமதாபாத்தில் தெரிவித்தார். (இ)

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தேசிய உதைபந்தாட்ட வீரர் திரு. நடராசாவினால் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## மீசாலையில் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தமிழ்க்காங்கிரஸ் கருத்தரங்கு நாளை மாலை மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவில் முன்றலில் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, உப - தலைவர் திரு. எஸ். ஆர்.கனகநாயகம், திரு. ரி. மகேந்திராசா பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாசம், திரு. ஆர். என். சிவப்பிரகாசம், திரு.மா. க. முதலியார் திரு. ரி. ஆனந்தராசா, திரு. எஸ். பஞ்சலிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்கள். (க)

# பாப்பரசர் தெரிவு: 2-வது தடவையாககரும்புகை!

வத்திக்கான், அக். 16

கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால்கள் 2வது தடவையாகவும் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யத் தவறிவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படாததை அறிவிக்கும்வகையில் கர்தினால்கள் தங்கிருந்த தேவாலயத்திலிருந்து இன்று இரண்டாவது தடவையாக கறுப்புநிற புகை வெளிக்கிளம்பியது

கடந்த சனியன்று வத்திக்கான் சிஸ்டைன் சிற்றாலய அறைகளில் தனித்தனியே புகுந்த 111 கர்தினால்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாக்கெடுப்பை ஆரம்பித்தனர் நேற்றும். இன்றும் நடத்திய வாக்செடுப்புக்களிலிரண்டிலுமே அவர்கள் பாப்பரசரைத் தெரிவுசெய்யத் தவறிவிட்டனர் என அறிவிக்கப்பட்டது

மீண்டும் வாக்கெடுப்பு நடைபெறுகிறது. (இ)

# மாஸ்கோவில் அல்ஜீரிய ஜனாதிபதி

## பிரஷ்னேவுடன் பேச்சு நடத்துவார்

மாஸ்கோ, அக். 16

இராணுவச் சதிப்புரட்சி மூலம் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டு பாலைவனச் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட அல்ஜீரிய ஜனாதிபதி திரு. பூமதீன் தற்போது மாஸ்கோவில் தங்கியிருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பூமதீன் நாட்டின் இன்றையநிலை குறித்து ரஷ்ய அதிபர் திரு. பிரஷ்னேவுடன் பேச்சுநடத்துவார் என்றும் மாஸ்கோ செய்திகள் தெரிவித்தன.

திரு பூமதீன் கடந்த 3 வாரங்களாகப் பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ளாமையினாலும் சாதாரணமாக அவர் காணப்படும் இடங்களில் காணப்படாததினாலும் அவர் சிறைவைக்கப்பட்டிருக்கலாம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (இ)

# "பண்டிதமணியின் அறிவாற்றல் அளவிடற்கரியது"

[யாழ்ப்பாணம்]

"பணடிதமணி அவர்கள் ஓர் இலட்சிய புருஷர். இலட்சிய புருஷராய அவரைத் தேடியடைந்து இலக்கிய கலாநிதி என்ற பட்டம் சிறப்புப் பெற்றது. வடமொழி தென்மொழிகளின் ஆழத்தை எம்மால் எவ்வாறு அறிய முடியாதோ. அதுபோலப் பண்டிதமணி ஐயாவின் கல்வி ஆழத்தையும் எம்மால் அளவிடமுடியாது. அவரிடத்தில் கல்வி பயின்றவர்கள் அவர்களிடம் தொடர்புபட்டவர்கள் யாவருமே பெரும் பாக்கியசாலிகள். இலக்கியகலாநிதி பண்டிதமணி வாழும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருப்பதே பெரும் பாக்கியம்"

கோண்டாவில் மக்கள் கோண்டாவில்இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு எடுத்த பாராட்டுவிழாவிற் சிறப்புரையாற்றிய கல்வி அதிகாரி திரு. அ. சி. நல்லையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதர் க. அருளம்பலம் தலைமைதாங்கிப் பேசுகையில் நாவலர் உண்மைச்சரித்திரத்தை நிலைகாட்டிய பண்டிதர் ஐயாவின் ஒவ்வொரு எழுத்தும் பேச்சும் அர்த்த புஷ்டி வாய்ந்தவை" என்றார்.

திருநெல்வேலிச் சைவாசாரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திரு. க. கந்தசாமி ஐயர் பொன்னாடை போர்த்திப் பாராட்டுரை வழங்கினார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உபஅதிபர் திரு. க. இராசரத்தினம் பேசுகையில், "பண்டிதமணியைத் தரிசிக்கும்போது கிரேக்க தத்துவ ஞானியான சோக்கிறட்டீஸின் ஞாபகமே வருகிறது. தமிழ் மொழியை ஊன்றிக் கற்று ஏனைய மொழி நூல்களை ஒப்பிட்டு ஆராய்வதில் பிரபல்யம்வாய்ந்த பண்டிதமணியினது ஒவ்வொரு ஆராய்ச்சிக்கும் அவருக்கும் தனித்தனி இலக்கியகலாநிதிப் பட்டம் வழங்கலாம் என்றார்.

உரும்பராய் சந்திரோதய வித்தியாலய ஆசிரியர் திரு. க. சோதிலிங்கமும் பேசினார்.

பண்டிதமணி தமது உரையில், "1930ம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய 40 வருடகாலம் இருள் விடிவதாகிய வைகறைப் பொழுதும் கோண்டாவிலும் அதை அடுத்த பிரதேசங்களும் என் சிந்தனைகளுக்கு அன்னையும் பிதாவுமாகிய முதற்பொருள்களாயமைமந்தன" என்றார்.

கல்வியா செல்வமா என்ற கருத்தரங்கை அடுத்து இராமகிருஷ்ணவித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் இடம்பெற்றன.

திரு. ச சுந்தரலிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினார். (உ)

# "அரசியல்கட்சிகளில் மட்டும் தங்கவில்லை"

(கொடிகாமம்)

"நம்நாட்டில் நல்லதொரு சுதந்திரமான சமுதாயத்தைக் கட்டி எழுப்பவேண்டும். ஒரு நாடு அல்லது ஒரு இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற நிலையை நிர்ணயிப்பது அதற்காகச் செயல்படுவது தனி அரசியல் கட்சிகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை"

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடந்த பாரதி பாலர் கழகத்தின் 14வது ஆண்டு விழாவில் உரையாற்றிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வி. என். நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: "பிள்ளைகளை நாட்டின்வருங்காலத் தலைவர்களாகவும், தைரியம் உள்ளவர்களாகவும், வீரியம் கொண்டவர்களாகவும் வளர்ப்பது கல்வியாகும். பிள்ளைகளின் மனதில் சிறுபராயத்தில் சிறந்த நல்ல கருத்துக்களுடன் கல்வியை ஊட்டி நாட்டின் நற்பிரஜைகளாக வளர்க்கவேண்டும். நம்முடைய மனதில் வேற்றுமைகளை அகற்றி நாம் எம்மைத் தகுதியுள்ளவர்களாக உயர்த்திக்கொள்ள வேண்டும். இதற்காக சமுதாயத்திலுள்ள எந்தச் சீர்கேட்டையும் அகற்றவேண்டும்.

"நாட்டில் நாம் சுதந்திரமாக வாழவேண்டுமாயின் சமூகக் குறைபாடுகளை நீக்கவேண்டும், இக்குறைபாடுகள் இருக்கும்வரை நாம் முன்னேற முடியாது. சாதிவேற்றுமையை ஒழித்தால் நாம் ஒரு நல்ல புனிதமான சமுதாயத்தை அமைக்கமுடியும்". (அ)

## ஆய்வுகூடம்

[கோண்டாவில்]

யாழ்ப்பாணம் பல்தொழில நுட்ப நிறுவனத்தில் தொலைக் கல்வி நிறுவனத்தால் தபால் மூலம் பயிற்றுவிக்கப்படும் பயிற்சி நெறிக்கான ஆய்வு கூடம் ஒன்று கட்டப்படுகின்றது. இது மூன்று அறை அறைகளைக்கொண்ட கட்டிடமாகும். இது விஞ்ஞான பயிற்சி நெறிகளின் உரிய ஆய்வுகூட வசதிகள் கொண்ட கட்டிடமாக செயல்படும் எனத் தெரியவருகிறது. (உ)




நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில் அவள் வசந்தம்

வெலிங்டன்
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்திரா
தங்கத்திலேவைரம்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Susan George
All Neat in
BLACK STOCKINGS

ஸ்ரீதர் தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
(யாழ்ப்பாணம்)
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
ராணி சிவாஜி-மஞ்சுளா
(யாழ். நகர்) நடித்த
உத்தமன்
(சினிமாஸ்கோப் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
நடித்த
பூம்புகார் (புதிய பிரதி)

வின்ஸர் போன்: 455 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெமினி - தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு
(புதிய பிரதி)

போன்: 7642.
சாந்தி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) சிவாஜி - தேவிகா - நாகேஷ்
கே. பாலச்சந்தரின்
நீலவானம் —புதிய பிரதி—

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) மருதநாட்டுவீரன்

Phone: 360
REGAL Daily 4-30, 7-00, & 9-30 P. m.
(Jaffna) Richard Harris in
20th Century Fox Present
BLOOMFIELD
(colour)

தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ராஜா ஃ மரிக்கார் ராமதாஸ்
(யாழ். நகர்) ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்


# இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 31-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(17-10-78)

**மேடம்:-** கரும்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கக்கூடும், மனப்போராட்டங்களினால் வேதனைப்படுவீர்கள், அதிக முயற்சி எடுத்தாலும் அற்பலாபமே, முன்னெச்சரிக்கை வேண்டும்.

**இடபம்:-** கன்னல் மொழி மூலம் காரியங்களைச்சாதிப்பீர்கள், ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பார்கள், பொருள் வரவிற்கும் இடமுண்டு.

**மிதுனம்:-** மனையில் பூசல்கள் தோன்றிமறையும், தனிமையை விரும்புவீர்கள், நண்பர்களே சூழ்ச்சிவலை விரிப்பார்கள், பொறுமையைப் பேணவும்.

**கடகம்:-** இலாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள், வாகனச் சொந்தக்காரர்ளுக்கு சிறப்பான தினம், தாய்வழியால் தனவரவிற்கு இடமுண்டு, நல்லநாள்.

**சிங்கம்:-** சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும், அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும், எல்லாம் இன்பமயம்.

**கன்னி:** தூரத்துப் பயணம் துயரத்தைத்தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

**துலாம்:-** வாழ்க்கையில் தென்றல் வீசும், கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாகவிருக்கும், மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள், சுகபோக நாள்.

**விருச்சிகம்:-** வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம், அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும், சகோதர வழியாலும் சஞ்சலம் உண்டு.

**தனுசு:-** மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம், முயற்சியால் முன்னேற்றமுண்டு.

**மகரம்:-** கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும், எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

**கும்பம்:-** புதிய தொழில் மூலம் லாபம் கிடைக்கும், புத்திரர் புகழ் பெருகும், வியக்கத்தக்க சாதனையொன்றும் நிலைநாட்டப்படலாம்.

**மீனம்:-** வேண்டாத உறவுகளை துண்டித்தல் நன்று, வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், பெரியோர்களை பகைத்துக்கொள்ளாது பொறுமையைப் பேணி நடக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## செயற்கை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுடன்என்னை அணுகினால் அவர்களுக்கு என்னாலியன்ற உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன்''.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பேசுகையில், ''கிராம முன்னேற்றச் சங்கங்கள் மக்களுக்கும் எம். பி.க்களுக்குமிடையே பாலங்களாக விளங்குகின்றன. கிராமங்கள் தோறுமுள்ள கல்விமான்கள் பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து எமக்குத் தந்தால் நாம் எம்மாலியன்ற உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறோம். நாம் அபிவிருத்திற் திட்டங்களுக்காகப் பெருமளவு பணத்தை ஒதுக்கியும் கூட அரசாங்க அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் அபிவிருத்தி முயற்சிகள் தடைப்பட்டுள்ளன'' என்று கூறினார்.

மற்றும் திருவாளர்கள் கே. குமாரசாமி, கே. நாகேந்திரராஜா, வி. பெருமையினார். ஆகியோரும் இவ் விழாவில் பேசினர். விழா ஆரம்பத்தில் உடுப்பிட்டி எம். பி. நூலகம் ஒன்றை சங்கக் கட்டிடத்தில் திறந்துவைத்தார். விழா முடிவில் திரு. இ. சோமசுந்தரம் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

## பப்பரசர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தையான 2-வது அருளப்பர் சின்னப்பரின் வயது 58 ஆகும். இவர் இத்தாலி நாட்டை சேராதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அருணோதயா அதிபருக்கு கொழும்பில் வரவேற்பு

(கொழும்பு)

''வேறெந்தப் பாடசாலைக்கும் இல்லாத முறையில் அருணோதயாக் கல்லூரிக்கு மலேஷியாவிலிருந்து ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை ஒவ்வொரு வகுப்பினருக்கும் அமைக்கப்பட்டுள்ள புலமைப் பரிசில் திட்டம், இங்கிலாந்தில் பழைய மாணவர் சங்கம் அமைத்து கட்டிட நிதி ஆரம்பம், கொழும்பில் சிறப்பாகவும் அக்கறையாகவும் இயங்கும் அருணோதயா அபிவிருத்திக் கழகம் ஆகியன இக்கல்லூரியின் வளர்ச்சிக்குக் கிடைத்துள்ள சிறந்த சூழ்நிலைகள். இவற்றைச் சிறப்பாக எமது பெற்றோரும் மாணவரும் பயன்படுத்தவேண்டும்.''

இவ்வாறு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அருணோதயா அபிவிருத்திக் கழகத்தினால் வெள்ளவத்தையில் வைத்துத் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் கூறினார். பெருந்தொகையான பழைய மாணவ மாணவிகள் தேநீர் விருந்தில் பங்குபற்றினர்.

வைபவத்திற்குத் தலைமை வகித்த கழகத் தலைவர் திரு. சி. இரங்கநாதன் கியூ. சி. தமதுரையில் ''அருணோதயாவின் வளர்ச்சியும் உயர்ச்சியும் பழைய மாணவர்களிலும் பெற்றோர்களிலும் தங்கியுள்ளதெனவும், அளவெட்டி வாழ் மாணவரது சிறப்பாற்றலை வெளிக்கொணர்ந்து கல்லூரியின் தரத்தை உயர்த்த இக்கழகம் பல பணிகளை மேற்கொண்டு புதிய அதிபருக்கு வேண்டிய உதவியையும் ஒத்தாசையையும் கொடுக்க முன்வந்துள்ளதெனவும்'' கூறினார்.

கழகச் செயலாளர் திரு. பொ. நல்லையா தமது உரையில் ''பேச்சினைக் குறைத்து செயலாற்றவேண்டுமெனவும் இங்குள்ள அளவெட்டி வாசிகள் இக்கழகத்தினூடாக அருணோதயாவை மாதிரிப் பாடசாலையாக்க முயற்சிப்பதாகவும் கூறினார்.

உப அதிபர் திரு. ந. சிவபாதம், திரு. ச. பரநிருபசிங்கம், திரு. க. சுப்பிரமணியம், கட்டிடக் கலைஞர் திரு. துரைசிங்கம், அவுஸ்திரேலியத் தூதரகத்தைச் சேர்ந்த திரு. தி. மயில்வாகனம், திரு. குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினர். (உ)

# தொழில்நுட்பநிறுவனத்தில் போட்டி சரஸ்வதிபூசை!

[கோண்டாவில்]

யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் இந்து மாணவர் மன்றம் சரஸ்வதிக்கு விழா எடுத்தபோது, இன்னும் சில மாணவர்கள் ஒன்றுகூடி விழா மண்டபத்துக்கு நேரெதிரான வகுப்பறை ஒன்றில் போட்டிச் சரஸ்வதி பூசை நடாத்தினார்கள்,

போட்டி விழா நடத்திய குறிப்பிட்ட மாணவர்களை இந்து மாணவர் மன்றம் தங்களோடு சேர்ந்து சரஸ்வதி விழாவில் ஒத்துழைக்கும்படி கேட்டபோதும், அந்த மாணவர்கள் இவ்வாறு நடந்து கொண்டது குறித்து இந்து மாணவர் மன்றம் கவலை தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டிப் பூசைக்கு சில ஆசிரியர்களும் மறைமுக உதவிபுரிந்தார்களாம்,

## ஆசிரியர்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தவே அரசு திட்டம் தீட்டியது. ஆசிரியர்கள் இடமாற்றம் எமக்கோ அல்லது ஆசிரியர் சங்கங்களுக்கோ அல்லது அதிபர்களுக்கோ தெரியாத வகையில் நடைபெறுகின்றது. இதனை பகிரங்கமாக நாம் எதிர்க்கவேண்டும்.

### இரண்டையும் கலக்காதீர்

எனவேதான் அரசியலையும் அரசாங்கத்தையும் ஒன்றுகச் சேர்க்காது கல்வியில் பெரும் பணிபுரியும் ஆசிரியர்கள் முன்னோடியாகச் சிந்தித்து எதிர் கால சமுதாய நன்மை கருதி ஒன்றுபட்டு இயங்கவேண்டும். அரசாங்கங்கள் மாறலாம், ஆனால் ஆசிரியர்களின் நற்பண்பும், நற்பணியும் ஒருபோதும் மாறுவதில்லை என்றார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க முன்னைநாள் தலைவர் திரு. க. பரமலிங்கம் பேசுகையில் ''எந்தத்துறைகளை எடுத்தாலும் அதில் எல்லாம் அரசியல் கலப்பையே காண்கின்றோம். இதனால் தொழிற்சங்கங்கள் ஏதாவதுபயன்அடையமுடியுமாஎன்ற சந்தேகம்எழுந்துள்ளது. ஆனாலும் தொழிற்சங்கம் சமுதாய நலனை மனதிற்கொண்டு இயங்கவேண்டும் என்பதே எனது எண்ணம்.

அரசியல் பழிவாங்கல் எந்தக்கட்சியிலும் இருப்பது வருந்தத்தக்கது. வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் சங்கம் தாம் அதனைத் தொடங்குமுன் நன்கு சிந்தித்தபின்பே அதில் இறங்க வேண்டும். ஆசிரியர்களும் தமது உரிமைகளைப் பெறுவதற்காக வேலைநிறுத்தத்தில் குதிக்குமுன் தமது கடமையில் தவறலாகாது எனவேதான் ஒன்றுபட்டு இயங்கும் சங்கங்கள் தமது உரிமை பெறுவது சுலபமாக அமையும்'' என்றார்.

வேறு பலரும் உரையாற்றினர். (உ)

## கிளிநொச்சி மகாவித்தியாலய பொன் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் பொன்விழா அடுத்த ஆண்டு ஜூலை மாதம் மூன்றாம் திகதி பெருவிழாவாகக் கொண்டாடப்பட விருக்கின்றது. இப் பாடசாலையின் ஆரம்பகால அதிபர் திரு. சரவணமுத்துவின் பெயரும் பாடசாலையின் வளர்ச்சிக்கு முன்னின்ற அதிபர்களான வேலுப்பிள்ளை, பொன்னையா, வைத்தியநாத ஐயர் என்போரின் பெயர்களும் மகாவித்தியாலயத்தின் நாலு இல்லங்களுக்கும் சூட்டப்பட்டுள்ளன. (அ)

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபால்நிலையத்தில், இனந்தெரியாத நபரினால் கைவிடப்பட்ட ஒரு பேனா, திரு. க. சின்னத்துரை என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர், அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். [ஆ-ச்]

## குப்பிழான் வெற்றி

[யாழ்ப்பாணம்]

கட்டுவன்க் தென்மயிலை இரண்டாம்பிரிவு கோஷ்டிக்கும் குப்பிளான் விக்னேஸ்வரா கோஷ்டிக்குமிடையே குப்பிளானில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் குப்பிழான் விக்னேஸ்வரா 6 - 2 கோல்களால் அமோக வெற்றியீட்டினர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. க. சுப்பிரமணியம் மத்தியஸ்தம் வகித்தார். [உ]

# "எமக்கு ஆதரவளித்தால் ஒரே ஆண்டில் தமிழீழம்!"

## சுயாட்சிக் கழகத் தலைவர் அறிவிப்பு

[கோண்டாவில்]

"தமிழினம், இன்று பெரும் நெருக்கடி நிலையில் உள்ளது. எமது இயக்கத்திற்கு மக்கள் பூரண ஒத்துழைப்புத் தந்தால் ஒரு வருடத்திற்குள் தமிழ் ஈழம் அமைப்போம்."

இவ்வாறு சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம், ஆனைக்கோட்டை பாரதி சனசமூநிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

கருத்தரங்கில் ஒரு பேச்சாளர் பேசும்போது சிறிது சலசலப்பு ஏற்பட்டபோதிலும் பின்னர் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெற்றது.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது மக்கள், இன்னும் மேடைப் பேச்சுக்களிலும், அலங்காரங்களிலும் தான் ஏமாறுகிறுர்கள். இதேநிலையில் நாம் தொடர்ந்தும் இருந்தோமானல், 15 வருடங்களில் தமிழினம் முற்றுக அழிந்துவிடும். தமிழ்ப்பிள்ளைகளின் போதனமொழி, இவ்வருடம் பாதிக்கப்பட்டுவிட்டது இதை, இன்றைய தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். எமது இயக்கத்திற்கு மக்கள் பூரண ஒத்துழைப்புத் தந்தால், ஒரு வருடத்திற்குள் தமிழ் ஈழம் அமைப்போம். சுதந்திர வர்த்தக வலயம், தமிழர்களைக் குழிதோண்டிப் புதைக்கும்" என்ருர்.

### கோடீஸ்வரன் பேச்சு

"ஆங்கிலம் படித்தவர்களும், சட்டத்தரணிகளும் தான் ஒரு அரசியல் இயக்கத்திற்குத் தலைமைதாங்கவேண்டுமென்ற நிலை மாறி, சிந்தனைத் தெளிவகொண்ட எவரும் தலைமைதாங்கலாம் என்ற நிலை தமிழ்மக்கள் மத்தியில் எழாதது வருந்தத்தக்கது" தமிழர் சுயாட்சிக் கழகச் செயலாளர் திரு. எஸ். கோடீஸ்வரன் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அரசுடன் இனிமேல் எந்தப் பேச்சுவார்த்தையும் பயனளிக்கப்படமாட்டாது. நாம் திருகோணமலையில் போட்டியிடாதுவிட்டது, இரண்டு தமிழ்க்கட்சிகள் ஒரே தொகுதியில் போட்டியிட்டால் சிங்களக் கட்சியான யூ. என் பி கைப்பற்றிவிடுமென்ற காரணத்திற்காக எவருடனும் கலந்தாலோசியாமல் விட்டுக்கொடுத்தோம். எந்தவொரு கட்சியாயினுஞ்சரி, பொது நன்மைக்கு இடையூருக இருக்ககூடாது. இனிமேல தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட மந்திரிப் பதவியை ஏற்பதில் பிரயோசனமில்லை. இப்போதைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, எந்தவொரு போராட்டத்தையும் நடத்தமாட்டாது தமிழ்மக்கள், தென்னிலங்கைக்கு தொழில் செய்யச் செல்லும் எண்ணம் முதலில் மாறவேண்டும்" என்ருர்.

சுயாட்சிக் கழகத்தின் துணைச் செயலாளர் திரு ந. ஸ்ரீகாந்தா பேசும்பொழுது, 'நாம் அன்று கூறினேம் தமிழ் நாடுதான் தமிழர்க்கு விடுதலை அளிக்கும் என்று அன்று மறுத்தவர்கள் இன்று அது தான் வழியெனக் கூறுகின்ருர்கள். தலைவர்களின் வாழ்க்கை தமிழ் இனத்தின் வாழ்க்கையாக அமையமாட்டாது தொண்டமான் அன்று கூறினர், மாவட்ட மந்திரிப் பதவி மந்திரிகளுக்கு மாலை போடும் பதவியென இன்று அவரே மந்திரிசபையை அலங்கரிக்கிருர். தமிழர் சுயாட்சிக் கழகம் அரசியல் நோக்கு இன்றி மக்கள் நலனுக்காக ஒரு பரந்த வெகுஜன இயக்கத்தை நடத்த தயாராக இருக்கின்றது. அதுபோல தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமது பாராளுமன்றப் பதவியைத் துறந்து பரந்த வெகுஜன இயக்கத்தை நடத்த தயாரா?' எனக் கேட்டார். (உ)

---

## திருமலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டது என்று கூறப்படுவது தவறு:

1976ம் ஆண்டு இளிவெட்டி மாரியம்மன் ஆலய வளவில் ஒரு பெரிய அரசமரம் நின்றது. இதன் கிளைகளில் பிராணிகள் தங்கி ஆலயத்தை அசுத்தப்படுத்துவதால் மூதூர் நீதவானின் உத்தரவுப்படி இம் மரத்தின் கிளை வெட்டப்பட்டது.

இதைவிடவேண்டுமென்று தமிழர்கள் அரசமரத்தை வெட்டவில்லை.

### சிறையில் இருக்கிருர்

மூதூர் முன்னுள் இரண்டாவது எம். பி. திரு. தங்கத்துரையின் தம்பி குமாரதுரை சிறையில் இருக்கிருர் என்பதை நான் அறிவேன்.

இதைவிட அவர் கொலைகளுக்கு உடந்தையாக இருக்கிருரா அல்லது அவர் எக்காரணத்திஞல் சிறையில் இருக்கிருர் என்பது எனக்குத் தெரியாது.

1977ல் நான் பொதுக்தேர்தலில் போட்டியிட்டேன். வெற்றியும் அடைந்தேன். அதைவிட ஆகஸ்ட் 7ல் நான் பாராளுமன்றத்தில் திருமலை நகரைத் தலைநகராக்கவேண்டும் என்று பேசவில்லை.

### வடக்கு-கிழக்கு தமிழரால் ஆளப்பட்டது

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களால் ஆளப்பட்டு வந்தது என்பதை நான் அறிவேன். அதனுல் அது யாரால் ஆளப்பட்டதுஎன்ற ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை

### வன்னித் தமிழர் ஆட்சி

அது தொடர்பான விளக்கங்களை எனது சட்டத்தரணிகள் அளிப்பார்கள் கட்டுக்குளம்பற்று, கொட்டியாபுரப் பற்று (மூதூர்) கம்பிலுவில் பற்று ஆகிய இடங்களை வன்னித்தமிழர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளார்கள் என்பதற்கான சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன.

### தமிழ் மாவட்டங்கள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னுர், அம்பாறை ஆகிய வட, கிழக்கு மாகாண மாவட்டங்கள் அத்தனையும் தமிழ் மாவட்டங்களே இந்தப்பகுதிகள் அனைத்தும் தமிழ் ஈழத்தின் பகுதிகளாகும். இதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தமது 'தேர்தல் விஞ்ஞாபனத்தில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளது.

தமிழ் ஈழத்தில் தமிழர்கள் மட்டும் அல்ல எந்த இனத்தவரும் வாழலாம். மனிதனை மனிதன் சுரண்டும் தொல்லை தமிழ் ஈழத்தில் இருக்காது.

தமிழ் சிங்கள முஸ்லிம்களாகிய மூன்றுஇன மக்களும் இங்கு பயமின்றி வாழலாம்.

### அனுமதி பத்திரங்கள்

ஆகஸ்ட் கலவரத்தின்போது திருமலை நகரத்தில் சிங்கள வர்த்தகர்களுக்கு தவறுன முறையில் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

காவற்படையினருக்குத் தேவையான உணவுப் பொருட்களை அவர்களே தங்கள் வாகனமூலம் முகாமுக்குக் கொண்டு செல்லலாம் அப்படி வசதி இருந்தும் சிங்கள வர்த்தகர்களுக்கு ஊரடங்குச்சட்ட உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்ட மர்மம் என்ன?

கமிஷனர்! கலவரத்தில் மக்கள் பீதியடைந்து வீடுகளில் பதுங்கி யிருந்தசமயம் அவர்கள் மரக்கறிபாண் ஆகியவற்றை வழங்கும் நிலையில் இருக்கவில்லை. எனவே இந்த ஊரடங்குச்சட்ட அனுமதிப் பத்திரம் கொடுத்தது பற்றி உடனடியாக விசாரணை செய்யப்பட வேண்டும்.

அரசதரப்புச்சட்டத்தரணி அத்தருணம் திருமலை உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. சிறில் வியனகே என்பவரே அவற்றை வழங்கியவர் அவரை நான் கொழும்பில் சாட்சியம் அளிக்க அழைக்க இருக்கிறேன். (க)

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered Newspapr in Srilanka

---

## "சேவையால் உயர்ந்தவர் அதிபர் ஜயரத்தினம்"

(யாழ்ப்பாணம்)

"மகாஜனக் கல்லூரியின் முன்னுள அதிபர் அமரர் ஜயரத்தினம் இக்கல்லூரிக்கு ஆற்றிய அளப்பரிய சேவை நாம் அவரைத் தெய்வமாக வழிபடக்கூடிய அளவுக்கு உயர்த்தியுள்ளது. நமது கலை, கலாச்சாரத்தில் அதிக ஈடுபாடுடைய அன்னருக்கு இன்றைய விழாவில் இடம் பெறும் கலை நிகழ்ச்சிகளை அர்ப்பணம் செய்வதில் பெருமை அடைகிரும்."

இவ்வாறு மகாஜனக் கல்லூரி அதிபர் திரு பொ கனகசபாபதி தெரிவித்தார்.

கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு கூடத்தில், ஜயரத்தினம் நினைவு நாளும் கனிஷ்ட பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

யாழ். கல்வித் திணைக்கள சணக்காய்வாளர் திரு நா. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அதிபர் திரு. கனகசபாபதி அமரர்கள் தெ. துரையப்பாபிள்ளை. தெ து. ஜயரத்தினம் ஆகியோரின் உருவச் சிலைகளுக்கு மாலை சூட்டியதை அடுத்து செல்வி ஆஷா விபூதினி வரவேற்புரை நிகழ்த்தினர்.

கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது:-

தமது தந்தையார் சிறிதாகக் கட்டிக் கொடுத்த மகாஜனக் கல்லூரியை வளர்த்துப் பெரும் புகழிட்டச் செய்தவர் அமரர் ஜயரத்தினம். அன்னரின் பெருமுயற்சியினலேயே இக்கல்லூரி கல்வியிலும், கலை, கலாச்சாரத்திலும் பெரும் புகழும் பெற்று விளங்குகிறது.

நினைவுநாட் பேருரையை நிகழ்த்திய அமரர் ஜயரத்தினத்தின் சக ஆசிரியர் திரு. க. சின்னத்தம்பி அமரரின் சேவையையும் சிறப்பையும் விரிவாக எடுத்துரைத்தார்.

திருமதி சின்னத்தம்பி பரிசில்களை வழங்கினர்.

தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ)

---

கிரிக்கெட் டெஸ்ட்:

## பாக். 3--283

ஹைதராபாத், அக். 16

இந்திய-பாகிஸ்தான் முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் முதல்நாளான நேற்று பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 283 ஓட்டங்கள் எடுத்தது.

ஸாகீர் அபாஸ் 128 ஓட்டங்களையும், மக்கெண்டர் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், மொகமட் 40 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். காப்டன் முஷ்டக் மொகமட் 05 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்தியக்கோஷ்டியின் சுழல் பந்துவீச்சு வீரர்களான பேடி [காப்டன்], சந்திரசேகர் முறையே 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

---

## தாக்குதல்வழக்கில் எதிரிகள் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் தாக்குதல்வழக்கில் எதிரிகள்விடுதலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ஜி. எம். வீரத்ன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் 76 ஜூன் 17ம் தேதி ஆவரங்காலில் தவசி செல்லையா, தவசி பொன்னுத்துரை ஆகியோர் அதே ஊரைச்சேர்ந்த சி. அரியகுட்டி, ச. அருந்தவம், அ பரம்சோதி, ச சத்தியசீலன் ஆகியோருக்கு இரும்புகம்பியாலும் பொல்லுகளாலும், பாலைக்கத்தியாலும், படுகாயங்களும், சிறுகாயங்களும் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானுர், கோப்பாய்பொலிசார் வழக்கை தாக்கல் செய்திருந்தனர். (க)

---

பிராமணர் உட்பட

## சகல சமூகத்தவரும் சுவாமி தூக்கினர்

### சண்டிலிப்பாய் முன்மாதிரி

(சங்கானை)

அம்பாள் வீதியுலாவரும் நிகழ்ச்சியில் பிராமணர்களும், சகலசமூகத்தவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி சுவாமியைத் தூக்கி வீதியுலாவில் சிறப்பினைச் சேர்த்தனர்.

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலேயே விஜயதசமியன்று முன்மாதிரியான இச்சிறப்பம்சம் இடம்பெற்றது.

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையினருக்கு தமிழ்இளைஞர் பேரவையினராலும், சண்டிலிப்பாய் மனித உரிமைக்கழக கிளையினராலும் "ஆலயத்தில் வழிபடுவோரிடையிலும் தொண்டுசெய்வோரிடையிலும் எதுவித சாதிபாகுபாடும்காட்டப்படக்கூடாது" என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது சமய ஆசார அனுஷ்டானங்களுக்கு அமைய வரு பக்தர்களிடையில் வழிபடும் முறையிலும் சரி, தெய்வத்தொண்டு செய்வதிலும்சரி எதுவிதவேறுபாடும் காட்டப்படமாட்டாது என்று தர்மகர்த்தாசபையினரும் ஏகமனதான தீர்மானத்தின்படி இதற்கமைய விஜயதசமி மானம்பூ தினத்தன்று அம்பாள் வீதி உலாவரும் வைபவத்தில் பிராமணர்களும் ஏனைய சமூகத்தவர்களும் ஒன்று சேர்ந்து சுவாமிதூக்கி விழாவைச் சிறப்பித்தனர்.

---

## பாராளுமன்ற...

[1ம் பககத் தொடர்ச்சி]

ஜனதிபதி விசேஷ கமிஷன் சார்பில் அரச சட்டத்தரணியாக ஆஜரானுர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மேன் முறையிட்டு மனுமீது அவரது சட்டத்தரணி திரு. எச். சி. டி. சில்வா நேற்று தமது வாதத்தில்;

'ஜனதிபதி விசேஷ ஆணைக்குழுச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றை ஆணைக்குழு விசாரணை செய்யும் உரிமைபற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. சட்டம் எந்தபின்னர் நிகழ்ந்தவற்றை விசாரணை செய்ய உரிமை இருக்கலாம். மேலும், கடந்த ஆட்சிக்கால ஊழல்களை விசாரிக்குமாறு ஜனதிபதி தான் 'வாரண்ட்' பிறப்பித்துள்ளார். ஆனல் சட்டத்தில் எதுவுமே குறிப்பிடவில்லை. 'வாரண்ட்' மூலம் விசாரணைசெய்யமுடியாது.

"முன்னர் பிரதமராக இருந்த எமது மனுதாரர், தற்போது பாராளுமன்றத்தில் ஒரு அங்கத்தவராக இருக்கிருர். விசாரணைசெய்யும் முழு உரிமையும் பாராளுமன்றத்திற்கே உண்டுதவிர, ஜனதிபதியின் விசேஷ ஆணைக்குழுவுக்கு அல்ல" என்று தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், திரு. அனுரா பண்டாரநாயக்காவும் வந்திருந்தனர். முன்னுள் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்ன, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் சட்டத்தரணிகளுடன் காணப்பட்டனர் ஏராளமான சட்டத்தரணிகளும் வந்திருந்தனர். (ம)

---

## ஆசிரியர் அன்பளிப்பாக மோட்டர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆசிரியர்களால் 3000 ரூபா பெறுமதியான மோட்டர் ஒன்று மேற்படி பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்படவிருக்கிறது.